

## கோமதி ஒரு கோபக்காரி

**பொன் குலேந்திரன் (கனடா)**

கோமதி போல்லாத கோபக்காரி. கோபம் அவளுக்கு சட்டென்று வரும், சட்டென்று போகும். வந்த கோபத்தை அதிக நேரம் மனதில் வைத்திருக்க மாட்டாள். கோபம் வந்து அடங்கிய சில நிமிடங்களில் சிரித்துப் பேசுவாள். எப்படி அவளின் கணவன் சுந்தரம் அவளைப் பொறுத்துக் கொண்டு இருக்கிறானோ தெரியாது. அவளின் குணம் அறிந்து அவளின் மாமன் சிவாவும், மாமி பார்வதியும் வேறு வீட்டில் வாழ்ந்தார்கள் இருவருக்கும் தங்களின் ஒரே பேத்தி வைதேகி மேல் சுந்தரத்தைப் போல் அதிகம் பாசம் வைத்திருந்தார்கள்

கோமதி தன் மகள் வைதேகியைக் கண்டித்து வளர்ப்பது, சிவாவுக்கும் பார்வதிக்கும் பிடிக்கவில்லை. சில சமயம்

கோபத்தில் வைதேகியைக் கோமதி அடித்தும் போடுவாள். அதனால் வைதேகி சாப்பிடாமல் தன் அறைக்குள் போய் பூட்டிக்கொண்டு படுத்திடுவாள். வைதேகி ஒரு பிடிவாதக்காரி.
தான் நினைத்ததைச் செய்ய விரும்புவாள். தான் அணியும் ஆடை மேல் அவளுக்குக் கவனம் இல்லை.
தன் அறையைத் துப்பரவாக வைத்திருக்க மாட்டாள். தான் படுத்த கட்டிலின் பெட்ஷீட்டை விரிக்க மாட்டாள். இதனால் கோமதிக்கும் வைதேகிக்கும் தினமும் சண்டை. இதை எல்லாம் சிவாவாலும் பார்வதியாலும் பொறுத்துக் கொண்டு ஒரே வீட்டில் வாழ முடியவில்லை . சில நாட்கள் வைதேகி தாயுடன் கோபித்துக் கொண்டு பாட்டி வீட்டில் போயிருந்து விடுவாள். பின் சுந்தரம் அவளைச் சமாதானம் செய்து வீட்டுக்கு அழைத்துச் செல்வான் .

ஒரு நாள் கோமதிக்கும் பார்வதிக்கும் பயங்கரச் சண்டை. காரணம் வைதேகி
பரீட்சையில் குறைந்த மதிப்பெண் எடுத்ததுக்கு கோமதி அ வளைக் கண்டித்து அடித்ததைப் பார்வதி விரும்பவில்லை .
சுந்தரம் கோமதியைப் பெண் பார்க்கப் போன போது அவளின் அமைதியான பேச்சும், சிரிப்பும்,

அழகும் அவனுக்குப் பிடித்துக்கொண்டது . கோமதியின் தாய் காவேரியும் கோபக்காரி என்று நண்பர்கள் சொல்லி சுந்தரம் கேள்விப்டிருந்தான். ஆனால் தாயைப்போல் மகளும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை

என்றான் நண்பர்களுக்கு சுந்தரம் .

கோமதி நல்ல உயர் பதவியில்

ஒரு நிறுவனத்திலிருந்தாள். தனக்குக் கீழ்

வேலை செய்பவர்களைக் கண்டிப்பாக நடத்தினாள் . குறித்த நேரத்தில் தான் கொடுத்த வேலையை அவர்கள் செய்து முடிக்க எதிர்பார்ப்பவள் அவள் . மிகவும் துப்பரவு பார்ப்பவள். வீட்டில் இருக்கும் எல்லாப் பொருட்களும் தான் வைத்த இடத்தில இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவள் . முக்கியமாகக் கணவன் சுந்தரமும், மகள் வைதேகியும் துப்பரவாக ஆடை அணிய வேண்டும் என விரும்புபவள் . கோமதி வீட்டில் வேலைசெய்த வேலைக்காரிகள் அடிக்கடி மாறிக் கொண்டே இருந்தார்கள்

. சமையல் பாத்திரங்களைக் கோமதி தினமும் பரிசோதித்து அழுக்கு இருக்கிறதா என்று பரிசோதனை செய்வாள். அப்படி எதாவது குறை இருந்தால் சமையல் அறை

போர்க்களமாகி விடும்.

சுந்தரம் கோமதியை விட அதிகம் படித்தவன் எம் பி ஏ செய்தவன் . ஒரு அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனத்தில் டைரக்டராக இருப்பவன். கோமதியை விட அதிக சம்பளம் .சலுகைகள் பெறுபவன் .

அவனுக்கு கொம்பனி வாகனம் வேறு. இவை எல்லாம் இருந்தும் அடக்கமானவன். பெருமை இல்லாதவன் அதிகம் எவரையும் எதிர்த்துப் பேசமாட்டான். கோமதி தன்னோடு கோபித்தால் ஒன்றும் பேசாது ஒரு புத்தகத்தோடு வீட்டுத் தோட்டத்துக்கு சென்று வாசிக்கத் தொடங்கிவிடுவான். தன் குடும்பத்தின் மேல் பற்றுதல் அதிகம். சுந்தரம்

சற்று கவனயீனமாக நடப்பவன் அவனுக்கு தன் அணியும் ஆடைகளில் அக்கறை இல்லை. சில சமயம் ஒரே ஆடைகளை சில தினங்களுக்குத் தொடர்ந்து அணிவான். அவனுக்கு சிகரெட் குடிக்கும் பழக்கம்

இருந்தது. அதைக் கோமதி வெறுத்தாள். கோமதிக்கு தெரியாமல் வெளியில் சென்று சிகரெட் குடிப்பான். சில சமயம் நண்பர்களோடு சேர்ந்து

கிளப்பில் பியர் குடிப்பான் இதெல்லாம் தெரிந்திருந்தும் கோமதி பொறுத்துக் கொண்டாள். காரணம் சுந்தரம் கோமதிக்கு ஒன்று என்றால்

துடிதுடித்துப் போவான். அவ்வளவுக்கு அவள் மெல் அன்பு

.தன் ஒரே மகள் வைதேகி மேலும்
சுந்தரத்துக்கு அளவற்ற பாசம் .

கோமதிக்கு வேலை பழு அதிகம். களைத்துப் போய் வருவாள். வீடு வந்தும் வீட்டில் மகள் தான் சொல்வதைச் செய்யாவிட்டால் களைத்து வரும் கோமதிக்குக் கோபம் பொத்துக் கொண்டுவரும் . சில சமயங்களில் வைதேகியை அடித்தும் விடுவாள்.

கோமதி தனது கணவனை உயிரிலும் மேலாக நேசித்தாள் . கணவரின் நீண்ட ஆயுள் மற்றும் ஆரோக்கியத்திற்காகவும், இல்லத்தின் அமைதி மற்றும் சந்தோஷத்திற்காகவும் சுமங்கலி பூஜையை வீட்டில் கோமதி செய்வாள் . தன் மகள் வைதேகி ஒழுக்கம் உள்ள படித்த பெண்ணாக வரவேண்டும் என்பது கோமதியின் ஆசை. கோமதி சிறு விசயங்களுக்கு அப்படி கோபமாக நடக்க வேண்டும் என்பதற்கு வெளிப்படையான காரணம் ஏதும் இல்லை. அதை
அவள் தெரிந்தும் தெரியாமலோ செய்கிறாள் . .

****

ஒரு நாள் சுந்தரம் தனது மனைவியையும், மகளையும் கடற்கரை நகரத்திற்கு ஹோட்டல் புக் செய்து

திட்டமிட்டபடி குடும்ப விடுமுறைக்குக் கூட்டிச் செல்ல தீர்மானித்தான் . வாகனத்தில் மூவரும் வந்து ஏறும் சமயம்

“ கொஞ்சம் பொறுங்கள் அத்தான் . ஓடரு முக்கிய பொருளை மறந்து விட்டேன். அதைப் போய் உடனே எடுத்து வாறன்”

“ என்ன சாமான் கோமதி”?

”வீட்டில் நான் கட்டி வைத்த குப்பை பை

போகும் வழியில் குப்பையில் போட எடுத்து வாறேன் “

” கோமதி இதுவா நேரம் குப்பை போட.

நாங்கள் விடுமுறைக்குப் போய் வந்தும் நான் கொண்டு போய் குப்பையை போடுறன் “என்றான் சுந்தரம்

கோமதி தனது விருப்பப் படி நடக்காததால் கோபத்தோடு ,

" உங்களுக்கும் துப்பரவுக்கும் வெகு தூரம். நாம் பொய் திரும்பி வர மூன்று நாட்கள் ஆகும் . அது வரை இந்த குப்பை நாறத் தொடங்கி விடும்”

“ கோமதி உனக்குக் குப்பை முக்கியமா அல்லது விடுமுறை முக்கியமா ? சுந்தரம் கேட்டான்.

தன இஷ்டப் படி நடக்கச் சுந்தரம்

தடுத்ததால் கோமதிக்கு கோபம் பொத்திக் கொண்டு வந்தது.

வாகனத்தில் இருந்து கோமதி இறங்கினாள்

“அம்மா குப்பையை பிறகு போடுவோம். இப்ப வாயேன். நேரமாகுது நாங்கள் போகவேண்டும்” அன்போடு சொன்னாள் வைதேகி

“நீ பேசாமல் இரு. எனக்குத் தெரியும் அது சரி எது பிழை என்று. வேண்டும் என்றால் நீயும் உன் அப்பாவும் விடுமுறைக்குப போங்கள் நான் வரயில்லை” கோமதி வீட்டுக்குள் சென்று மறைந்தாள்.

வீட்டுக்குள் போன கோமதி திரும்பி வந்து வாகனத்தில் ஏறவில்லை.

வீட்டுக்குள் போனதும் கோமதி ஒரு டம்ளர் தண்ணீரை அருந்தி விட்டுத் தோட்டத்தில் உள்ள கதிரையில் போய் இருந்தாள் . கோபம் வரும் சமயம் டாக்டர் சொன்னமாதிரி முச்சை மூன்று நிமிடங்கள் உள்ளே இழுத்து விட்டாள். மனதை சில நிமிடங்கள் கண்களை மூடிய படி ஒருமுகப் படுத்தினாள் இவை மனோத்துவ டாக்டர் கோபம் வரும்போது செய்யச் சொன்ன அப்பியாசங்கள்..

கோமதி கண்விழித்துப் பார்த்தபோது தோட்டத்தில் இரு றொபின் குருவிகள்

கீச்சிடும் சத்தம் அவளின் கவனத்தைக் கவர்ந்தது. சத்தம் வந்த திசையை நோக்கி பார்த்தாள் . தானியங்கள் தொங்கும் கும் கூட்டில்
இரு ரொபின் குருவிகள் ஒன்றை ஒன்று கொத்தி சண்டை பிடிப்பதைக் கண்டாள். அட கடவுளே தோட்டத்திலும் சண்டையா என்றது அவள் மனம் இரு நிமிடங்கள் அக் குருவிகளைப் பார்த்த படியே இருந்தாள் . அவை இரண்டும் தங்கள் சண்டையை மறந்து தோட்டத்தில் உள்ள சிறு தண்ணீர் குளித்த பின் ஒன்றை ஒன்று தம் அலகினால் முத்தம் கொடுத்தன அந்த குருவிகளின் செயலை அவளால் நம்ப
முடியவில்லை கோமதி சிந்திக்கத் தொடங்கினாள்

தேவை இல்லாமல் ஒரு சிறு குப்பை விசயத்துக்கு தனக்கு வந்த கோபம் அவளுக்கே வெகு ஆச்சரியமாக இருந்தது .
தன் பகுத்தறிவைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினாள்., தனது அவசர முட்டாள்தனமான சுய
தீர்ப்பின் , முடிவு சரியா பிழையா என்று
யோசித்தாள்., அவளின் குற்றம்செய்த மனம்
அவளை மேலும் சிந்திக்க வைத்தது . என் கணவர் என்னிலும் அதிகம் படித்தவர். நல்ல வேலையில்

இருப்பவர் , குடும்பத்தின் மேல் பற்றுள்ளவர் எனக்கும் வைதேகிக்கும் ஏதும் வருத்தம் என்றால் பதறிப் போவார். அவர் ஒரு நாளும் என்னை எதிர்த்துப் பேசியது கிடையாது நான் அவ்ரோடு நடந்து கொண்ட விதம் சரியா? அவர் பதிலுக்குப் பொறுமையாக இருந்தார். எம் மகள் கூட என்னை வாகனத்தில் வந்து ஏறும் படி கேட்டாள் . நான் என்ற என் அகங்காரம் என்னை விடவில்லை. . என் செயலுக்கு என் மனம் நீதிபதி இருப்பின், என் கட்டுப்பாடற்ற கோபத்திற்கு நான் செய்தது தவறு என்று சொல்லும்

நான் எதற்காக எடுத்ததுக்கு எல்லாம் அவர்மேல் கோபப் பட வேண்டும் முதலில் சுந்தரம்

என்னையும் வைதேகியை நேசிக்கிறார், எனக்கு மனைவி என் ற மரியாதையைக் கொடுக்கிறார் . அவர் எவ்வளவு திறமையானவர் என்பதில் அவருக்கு அகங்காரம் இல்லை. அவர் வீட்டைக் கவனித்துக்கொள்கிறார். ஒரு முடிவுக்கு வந்தால். கட்டிய குப்பை பையை கொண்டு

போய் தோட்டத்தில் உள்ள குடிசையில் வைத்தாள் எதுவும் நடக்காதது போல் வீட்டின் முன்

கதவை பூட்டிக் கொண்டு மௌனமாகத் திரும்பவும் வாகனத்தி ல் போய் ஏறினாள் . நடந்த

குப்பை பை எறியும் சம்பவத்தைப் பற்றி பயணத்தின் போது

தான் ஒன்றுமே பேசக் கூடாது என்று கோமதி தீர்மானித்தாள் .

தாய் வாகனத்தில் வந்து ஏறியதும் 'அவளை கட்டிப்பிடித்து அவளுக்கு வைதேகி முத்தம் கொடுத்தாள்

" தங்கியூ கோமதி. நீ திரும்பி வருவாய் என்று எனக்குத் தெரியும் " என்றான் சுந்தரம்

' டோன்ட் மென்சன் ப்ளீஸ் . என் கோபத்துக்கு ஐ யாம் சொறி" என்றாள் கோமதி

"எங்கள் விடுமுறை முடியும் மட்டும் நீ எங்களோடு கோபிக்க மாட்டாய் தானே " சுந்தரம் கேட்டான் .

" நிட்சயமாக இனி என் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வேன் அத்தான் "

அவள் மனதில் தோட்டத்தில் தான் கண்ட குருவிகளின் சண்டைக் காட்சியும், அதன் பின் நடந்த குளியலும் , கொஞ்சலும் அவளின் மனதை விட்டுப் போகவில்லை . இனி நான் என் கோபத்தைத் தனித்து அந்த குருவிகளைப் போல் வாழ வேண்டும் என்று தன் மனதுக்குள் தீர்மானித்தாள்.

வாகனம் தனது பயணத்தைத் தொடர்ந்தது

*****

(யாவும் புனைவு)